GWOP No. : 2/2024

நாள் : 28.10.2024

ம.சா. : 1

பெயர் : சுதா

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

08.05.2011 ல் எனக்கும் எதிர் மனுதாரருக்கும் திருமணம் நடந்தது. கருத்து வேறுபாடு காரணமாக நானும் அவரும் பிரிந்து இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. கருத்து வேறுபாடு என்ன என்றால் தினமும் குடித்து விட்டு வந்து என்னை இன்று எவனுடன் போய்வந்தாய் என்று கேட்டு டார்ச்சர் செய்வார். சாப்பிடவிடுவதில்லை. தூங்கவிடுவதில்லை. திருமணத்திற்கு முன்பு எனக்கும் அவருக்கும் 12 வயது வித்யாசம் என்பது தெரியுமா என்றால் தெரியும். அவரே அவரது வாயால் சொல்லியுள்ளார். நான் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்து அது சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் நடந்து வருவது தெரியுமா என்றால் தெரியும். இந்த விவாகத்து வழக்கில் நான் சீர்காழி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேனா என்றால் ஒரு வருடகாலமாக தொடர்ந்து ஆஜராகிவருகிறேன். அதுபோல் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. 11.04.2023 லிருந்து 18.10.2024 வரை நான் சீர்காழி நீதிமன்றத்தில் ஆஜராகாகததால் நீதிபதி அவர்கள் 18.10.2024 அன்று வழக்கை dismissed for default என்று தள்ளுபடி செய்துள்ளார்கள் என்றால் சரி. எனக்கு promotion க்காக புதுக்கோட்டைக்கு படிக்க அனுப்பினார்கள். அதனால் அங்கு படித்து கொண்டிருந்தேன். நான் குழந்தைகளை கேட்டு கஸ்டடி கேஸ் போட்டிருந்தேன். இரண்டு வழக்குகளிலும் அடுத்தடுத்த நாட்களில் வாய்தா போட்டதால் என்னால் அந்த வழக்கில் ஆஜராக முடியவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)